# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௭, | மலர் |
|---|---|---|
| ௩௨ | துன்முகி, ஆவணி,<br>1956 ஆகஸ்டு, செப்டம்பர். | ௫ |


## இந்திய விடுதலை இயக்கத் தந்தை.

குு. சிவமணி, B. A. (Hons.)

உரிமை அரசு என்பது பலருடைய தொண்டின்மீது கட்டப் பட்ட எழில்மிகும் பெருமாளிகை. அந்த மாளிகையை எழுப்பக் கனவுகண்டவர்களிற் பலர், அதற்கு அடிக்கற்களாகவும் அமைந்து விடுகின்றனர். இது வரலாறு உணர்த்தும் உண்மை. இதே போன்று, இந்தியா எனும் உரிமை மாளிகையை உருவாக்கப் பாடு பட்டு அதற்கு அடிக்கல்லாக அமைந்தவர்களில் தலைசிறந்து விளங்குபவர் **உலோக மானிய பால கங்காதர திலகர்.** அந்நாளில் ஆங்கில அரசை எதிர்த்துப் பேச எவருக்கும் துணிவில்லை. மக்கள் உள்ளங்களில் ஓங்கி வளரும் உரிமை உணர்வை அரசு மதிக்கவில்லை. மாறாக, அடக்குமுறையை வீசியது. படை வலிகொண்டு அரசு தடைபல போட்டபோது அவைகளை உடைத்தெறியும் உணர்வோடு எதிர்ப்பின் இடையிலே எதிர்நடை போட்டார் திலகர்.

திலகரின் இறப்பும், காங்கிரசில் காந்தி அடிகளாரின் நுழைவும் தம்முள் இயைந்தன. திலகர் மக்கள் எண்ணத்தையே பெரிதாக மதித்துப் போற்றினார். இருண்டு கிடந்த பெரும்பாலோரின் உள்ளங்களில் "விடுதலை எனது பிறப்புரிமை" என்ற மயக்கும் சொற்றொடர் மூலம் உரிமைத்தீயை மூட்டியவர் திலகர். அவர் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் மகாராட்டிரத்திற் பிறந்தார். கணக்கு, வடமொழி ஆகியவைகளில் புலமை பெற்றார். அவரது பொது வாழ்வின் முதல் நிலையில் புதிய ஆங்கிலப் பள்ளியிலும், புனா பெர்குசன் கல்லூரியிலும், பின்னர் தக்கணக் கல்விக் குழுவிலும் பணிபுரிந்தார். சிறு எல்லைக்குள் முடக்கிக்கிடந்த அவரது தொண்டு விரிந்து பரந்தது. "கேசரி", "மகாராட்டிரம்" என்னும் இதழ்களைத் தோற்றுவித்துத் தமது எழுத்தாற்றலால் எண்ணற்றோருக்கு உணர் வூட்டினார். தன்னல மறுப்பும், எண்ணற்ற துன்பங்களுமே அவரது வாழ்வில் நிறைந்தன.

திலகரின் கொள்கைகளிலே அசைக்கமுடியாத உறுதிப்பாடு உண்டு. பெரும்பாலான அரசியல் தலைவர்களைப்போல எதையும்

அவர் மேற்போக்காக விடுவதில்லை. அடிமைத் தளையில் அகப்பட்டு நைந்துபோன மக்களுக்கு அவர் விடுத்த உரைகள் பற்பல :

விடுதலையற்ற அமைதி, சாக்காட்டின் அமைதியைவிட வேறு தன்மையதாக இருக்க முடியாது.

மக்களின் விருப்பத்திற்கு மாருக வேற்று நாட்டவரால் திணிக்கப்படும் சட்டம் சட்டமில்லாத சட்டமாகும்.

சூழ்ச்சி, சூழ்ச்சியாலே முறியடிக்கப்படவேண்டும். ஏனெனில் அரசியலில் முழு உண்மைக்கு இடமில்லை.

மாறுதல்களையும் புதுமைகளையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவை நமது முடிந்த இலக்காகிய விடுதலைக்கு வழி வகுக்கும் நடைக்கற்களாக இருக்கவேண்டும்.

திலகர் அமைதியின்மைக்கு என்றும் ஆக்கமளிக்கவில்லை. ஆயினும் வீரம் செறிந்த அவரது பேச்சும் கருத்தும், எண்ணமும் எழுத்தும், உரிமை உணர்வுமிக்க இளைஞர்களை வங்காளத்திலும் மகாராட்டிரத்திலும் ஆங்கில அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யத் தூண்டின. திலகரின் தேசீய வீரந்தான் தமிழகத்துப் பெருங்கவிஞர் பாரதியாரின் தேசீயப் பாடல்கள் பலவற்றிற்கு உயிர் நிலையாக அமைந்தது. அதுவே பாரதியாரை,

‘நாமிருக்கும் நாடு நமது’
‘சோர்வெனும் பேயை ஓட்டும்
சூழ்ச்சி யவன்பெயர்’
‘சேரலர்க்கு நினைக்கவும் தீயென
நின்ற எங்கள் திலக முனிவன்’

என்றெல்லாம் பாடச் செய்தது. பாரதியார் திலகரின் கொள்கைகளில் பற்றுக்கொண்டவராதலால் நிதானக் கட்சியினரைக் கேலி செய்து அவர் பாடியுள்ளார். “நம்ம ஜாதிக் கடுக்குமோ சுதந்திரப் பேச்சு”, என்ற அவரது பாட்டு. “மேத்தா, கோகலே முதலிய நிதானஸ்தர்கள், நமது தேச விமோசனம் என்னும் சிதம்பரத்தை எண்ணி ஆசைகொண்டு பரவச நிலையிலிருக்கும் திலக முனிவராலும், அவரது கட்சியாராலும் நாட்டுக்குக் கெடுதி விளையும் என்று பேசும் விஷயங்கள் அமைக்கப்பட்டுள்ளன” என்ற குறிப்புடன் வெளியிடப்பட்டது.

திலகர் தமது வாழ்வின் குறிக்கோள்களைப் பகவத்கீதையிலிருந்தும், சிவாஜி போன்ற பெருவீரர்களின் வரலாற்றிலிருந்தும் பெற்ருர். உரிய நேரத்தில் உரிய கடமையை எவருக்கும் அஞ்சாது செய்து முடிக்கவேண்டும் என்ற கீதைப் பேருரையைத் தமது வாழ்விலே கொண்டொழுகினுர். பெரும்புயலுக்கு முன்னர்க்கூட அவரது முகம் அமைதியாற் பொலிந்தது, 1908-ஆம ஆண்டில், புரட்சியைத் தூண்டக்கூடிய நடத்தைக் குற்றத்திற்காக, திலகர் ஆறு

ஆண்டுகள் தண்டனை பெற்ருர். தீர்ப்புக்கேட்டு அனைவரும் கலங்கினர். ஆனல் திலகர் அமைதியாக,

> "அறமுறைப்போரின் தீர்ப்பு எப்படி இருப்பினும், நான் குற்றமேதும் அறியாதவன் என்று கொள்கின்றேன். மனித இனத்தின் விதியை ஆளும் பெருஞ் சக்திகள் இருக்கின்றன. நான் விடுதலை பெற்று வெளியில் இருப்பதைவிட, நான் துன்புறுவதிற்ருன் அதிக நன்மை இருக்கிறது என்பது இறையறிவின் எண்ணமாக இருக்கலாம்"

என்று உரைத்தார். இன்று உரிமை வாழ்வென்ற பெருமரம் பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றது. பத்தாவது ஆண்டின் வளர்ச்சியையும் எட்டிப் பிடித்துவிட்டது. அதன் பயன் கொள்ளும் நேரத்திலே, அதற்கு வித்திட்ட வீரர் திலகரையும், அது முளைத்துக் கிளம்பும்போது அவர் இறந்துபோகவே அதைக் கட்டிக்காத்துப் பெருமரமாக்கிய அண்ணலார் காந்தியடிகளையும் நாம் மறத்தல் இயலாது. இந்திய விடுதலை இயக்கத் தந்தையாகிய திலகரின் நூருவது பிறந்தநாள் 23—7—1956 அன்று நாடெங்கும் கொண்டாடப் பெற்றது. அவரது தொண்டினை உலகமே புகழ்ந்து பாராட்டியது. அந்தப் பாராட்டிலே நாமும் கலந்துகொண்டு அவரது புகழ் வளர்க என வாழ்த்துவோமாக!

---

## மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் கிடைக்கப் பெற்றது. மிக மகிழ்ந்தோம். மதுரை என்ருலே இனிமை; தமிழ் என்ருலும் இனிமை; இப்பெயர்க் காரணங்களுக்கேற்ப இப்பொன்விழா மலரானது காணபவரின் கார்களுக்கு இன்பம் ஊட்டும் தமிழ்ப் பெருமக்களின் படத்தையும், படிப்பவரின் மனத்திற்கு இன்பம் ஊட்டும் தமிழறிஞரின் கட்டுரைகளையும் பெற்று அகமும் புறமும் இன்பஞ் செய்வதாய் அமைந்துள்ளது. இவ்வாடாத மலரிலே உள்ள கட்டுரை என்னும் இதழ்களெல்லாம் வற்ருத கருத்தென்னும் புது மணத்தைப் பரவச்செய்து, சொற்சுவை பொருட்சுவை என்னுந் தேனைச் சொரிந்துகொண்டு, இலக்கியம், இலக்கணம், இசை, சிற்பம், மருத்துவம், சமயம் முதலிய பல நிறங்களுடன் கூடி மிக அழகாய் விளங்குகின்றன. இங்ஙனம் சிறந்த இம்மலரைத் தமிழ் மக்களாகிய வண்டுகளெல்லாம் பெரு விருப்புடன் பெற்றுப் பெரும் பயனடையும் என்று எதிர்பார்க்கின்ருேம். இங்ஙனம் நல்ல முறையில் இம்மலரை வெளியிட முயன்ற பொன்விழாக் குழுவினரையும், சிறப்பாக இக்குழுவின் தலைவரான திருவாளர், பி. டி. இராசன் அவர்களையும் பாராட்டுகின்ருேம்.

பொழிற்ருெண்டர்.

# அகில உலகத் தமிழ்க் கலை மன்றம்.

**கா. பொ. இரத்தினம்,**

தலைவர், தமிழ்மறைக் கழகம்.

தமிழ் மொழி இப்பொழுது பல துறைகளிலும் வளர்ந்து வருகிறது. தமிழகத்திலும், தமிழ் மக்கள் தொகையாக வாழும் இலங்கை, மலாயா, பர்மா, தென்னாப்பிரிக்கா, பீச்சித்தீவு முதலிய பல நாடுகளிலும் நம் மொழியின் ஆக்கங்கருதிப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. வீட்டு மொழியாய் அஃது அடிமைப்பட்டுக் கிடந்த காலம் போய்விட்டது. கல்லூரிகளிலும், ஆட்சி நிலையங்களிலும் ஆலயங்களிலும் அது முதன்மை பெற்று வருகிறது.

பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுடைய பேச்சிலே சில வேறுபாடுகள் காணப்பட்டன. அவர்களுடைய எழுத்திலே வேறுபாடுகள் இல்லை, என்று கூறத்தக்க நிலையில் இப்பொழுது தமிழ் மொழி விளங்குகிறது. பேச்சிலுள்ள வேறுபாடுகளை வளரவிடாமற்றடுத்து, எழுத்தில் எவ்வித வேறுபாடும் ஏற்படாமற் செய்தாற்றான் இந்த நாடுகள் யாவற்றிலும் இன்றுபோல் என்றும் தமிழ்மொழி ஒரு தன்மையாய் இலங்கும்.

இதனை நிறைவேற்றுவதற்குத் தமிழ் வழங்கும் எல்லா நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களோடும்—சிறப்பாகத் தமிழ் அறிஞர்களோடும் — தொடர்புகொள்ளத்தக்க முறையில் ஓர் அகில உலகத் தமிழ்க்கலை மன்றம் உடனே அமைக்கப்படல் வேண்டும். இந்த மன்றத்தின் தலைமை அலுவலகம் தமிழ் நாட்டிலே இருத்தல் நன்று. ஏனைய நாடுகள் ஒவ்வொன்றிலும் கிளை அலுவலகம் நிறுவப்படலாம். இம்மன்றம் அரசியல் தவிர்ந்த ஏனைய துறைகளிலும், சிறப்பாக மொழி, கலை, கலாச்சாரம் முதலிய துறைகளிலும் உலகமெங்கும் வாழுந் தமிழ் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்தித் தமிழினதும் தமிழினத்தினதும் ஆக்கத்துக்கு உழைத்தல் வேண்டும்.

இதனை நிறுவுதற்குத் தக்க உரிமையும் ஆற்றலும், சென்னை அரசாங்கத்தாருக்கே உரியதென்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். எனவே, இதனை நிறுவுதற்கு அவர்கள் முன்வரல் வேண்டும். அவர்கள் முயலாவிடின் தமிழ் நாட்டிலுள்ள செல்

வர்களோ, சைவ மடங்களோ, அண்ணாமலைப் பல்கலைக் கழகமோ இந்த மன்றத்தைத் தொடங்குதல் வேண்டும். தொடங்கியபின் சென்னை அரசாங்கத்தாருடைய ஆதரவு கிடைக்காமற் போகாது.

இந்த மன்றம் செய்யவேண்டிய பணிகள் பலவுள. இவற்றுள் உடனே செய்யப்படவேண்டியது கலைச் சொற்கோவை ஒன்றினை அமைத்தலாகும்.

## கலைச் சொற்கோவை.

இப்பொழுது தமிழகத்தில் மாத்திரமன்றி இலங்கையிலும் மலாயாவிலும் தமிழிற் பல கலைகளையும் கற்பிக்கத் தொடங்கியுளர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரும், சென்னை அரசாங்கத்தாரும் கலைச் சொற்கோவைகளை வெளியிட்டுளர். பௌதிகம், இரசாயனம், கணிதம், பூமிசாத்திரம் என்னுங் கலைகளுக்குரிய சொற்கோவைகளை இலங்கை அரசினர் வெளியிட்டுளர். இக்கலைச் சொற்கோவைகளிற் பல வேறுபாடுகள் உள. உலகிலுள்ள எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளுங் கல்லூரிகளும் கையாளுங் கலைச் சொற்கள் ஒரு தன்மையாகவே அமைதல் வேண்டும். ஆங்கிலம் போன்ற உலக மொழிகளில் இருப்பது போற் றமிழ் மொழியிலும் நாடோறும் வழங்குங் கலைச் சொற்கள் வேறுபாடற்றனவாய் அமைதல் இன்றியமையாதது. ஒரு நாட்டில் வெளியாகும் தமிழ்ப் பாட நூல்களை ஏனைய நாடுகளும் பயன்படுத்தல் வேண்டும். தமிழ் மொழி பல கிளைகளாகப் பிரிந்து போகாமல் இருத்தற்கும் இஃது இன்றியமையாதது.

இதனை நிறைவேற்றுவதற்கும் முன்னணியில் நின்று உழைக்கவேண்டியவர்கள் சென்னை அரசாங்கத்தினரேயாவர். அகில உலகக் கலை மன்றத்தை அமைத்து அதன்மூலம் பல நாட்டிலுள்ள அறிஞர்களைக் கூட்டித் தமிழ் மக்கள் வாழும் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக ஒரு கலைச் சொற்கோவையினை அமைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பணியை நிறைவேற்றுதற்கு வேண்டியன செய்தல் தமிழ் வளர்க்குஞ் சங்கங்கள், பத்திரிகைகள் முதலியவற்றின் கடனாகும்.

**வாழ்க தமிழ் ! வளர்க தமிழினம் !!**

# கையறுநிலை.

[ அ. பெ. அழகராயபிள்ளை, *தாரமங்கலம்.* ]

### அறுசீர்க் கழில்.

உலகுயிரோ டிறையென்னு மூன்றனோடு
மருவியொளி ருயிரின் வாழ்க்கை
நிலவுமெனச் சித்தாந்தக் கலைவல்லா
ரெஞ்ஞான்றும் நிகழ்த்து வாரால்
உலகமதும் செருநனுளா னின்றில்லை
யெனும்பெருமை யுடைத்தாந் தன்மை
அலகில்பல நூலுணர்ந்து குறபேடோர்ந்தா
ருளமதனி லமையு மம்மா

சொற்புலவ ராம்வரத நஞ்சையவே
டமையின்னுள் துறந்தே மல்லேம்
கற்பனைசேர் களஞ்சியத்தை கவியமுதம்
பொழிமுகிலைக் கருணை சார்ந்த
விற்பனம்சேர் புலமையினைச் சித்தாந்தஞ்
செறிகடலை வியக்கக் கூறும்
எற்பகலாம் கணிதம்தேர் சோதிடமாம்
ஒருகடலை யிழந்தா மந்தோ

தஞ்சையுறு கரந்தையினி லாசிரிய
னெனும்பட்டம் தரிக்கப் பெற்றாய்
கொஞ்சுதமிழ் வளவர்களால் நற்புலவ
ரேறெனவே குறிக்கப் பெற்றாய்
விஞ்சுபுகழ் தியாகவிநோ மென்கரத்தாற்
பொன்னுடை வேயப் பெற்றாய்
நெஞ்சமுனை நினைந்துநினைந் திருகண்ணீர்
மழைசொரிய நீத்தா யந்தோ

அற்றைமதி தனிலங்காள் அறிஞர்குழா
முளமுவப்ப அரிதி னுய்ந்து
கற்றவதி நுட்பமிகு தெளிபொருளை
புலவருறு கண்ங்கள் போற்ற
வற்றல்மரம் தளிர்த்தனைய வின்மொழியாற்
சொற்பொழிவு வகுத்த நீயோ
இற்றைமதி தனிலின்று நிலவாது
சென்றொழித்தா யிதயம் நோவ

பவப்பிணியை யறநீக்கும் பானடிக்கே
யுளம்பதித்துப் பரவி நாளும்
நிவப்புறவே புனலாடி பஞ்சகச்ச
மடிபுனைந்து நிறைபூக் கொண்டு
உவப்புறவே தமிழ்மறையும் திருவாச
கப்பாவு முரைத்து ரைத்து
நவப்புடனே புரிபூசை யென்றுகொலோ
யினியெங்கள் நயனம் காணும்

அன்புறுநற் செல்வர்களும் புலவர்களும்
மிகவிழைந்தே அறிஞர்ப் பேண
இன்புறுநல் லவைதிரட்டித் தமிழ்வாத
நஞ்சையவேட் கிசையே யோங்கப்
பொன்பெறுபொன் னுடையினைப் போர்த்திவிழா
வுளமகிழப் புரிந்தா மன்னுள்
துன்புறுவன் மண்ணுடை போர்த்தியினுள்
வுளமாழ்கத் துயர்கொண் டாம்மால்

சாற்றிடுதொல் காப்பியமாம் சலதிகுளித்
தருமணியைத் தருந்தக் கோனே
போற்றிடுசிந் தாமணியின் சுவைப்பொருளும்
கம்பர்சுவைப் பொருளுந் தேர்ந்து
ஆற்றல்மிகு வள்ளுவனின் கருத்தொப்ப
செவிக்குவிருந் தளிக்கும் வள்ளால்
மாற்றலரும் மிகவேட்பக் கேட்டாரைப்
பிணிக்குறுஞ்சொல் வழுத்த வல்லாய்

பொல்லாத துன்முகியாண் டானிமதி
நாலேழாம் பொதிந்த தேதி
நில்லாத புதவாரச் சதுர்த்தி திதி
மகவெனுமீன் நிகழும் காலை
எல்லாரும் நிசிகடிகைப் பன்மூன்றி
லிருந்தமிழ்நா டெவ்வங் கொள்ள
அல்லாரும் விடமுண்ட கண்டனடி
யிணைமலரை யடைந்த நாளே.

---

ஆசிரிய ரென்றும் அரும்புலவ ரேறென்றும்
மாசறவே பல்கலையும் மாந்தினவர்—பேசியபின்
பொன்னுடை போர்த்தப் பொதுளிய ஞானவடி
வென்னேகண் காட்சியுமென் னே.

எப்பொரு ளின்மதிப்பும் இல்லாத காலத்தே
துப்புறவாய் மாந்தர்க்குள் தோன்ற லியல்பேயோ?
அப்பொருளின் நீக்கத்தால் ஆன்ற துயரனைத்தும்
செப்புதலு மாங்கவர்தம் சிந்தைக் கேளிதலவே?

கால மறிந்தேயும் காலன் கடமைதனை
ஞாலமதில் செய்திடினும் நற்றமிழின் தொல்கலைகள்
தீரத் தெளிந்தவர்தம் தேகவியோ கம்காணின்
ஆரப் புழுங்கல்தமிழ் அன்பர் தனிக்குறியோ?

தம்பியாய் வந்த தனித்தமிழ்ப் பண்டிதராம்
கந்தசா மிக்கவிஞர் காணுங்கால் மற்றும்
கரந்தையஞ் சங்கக் கவியரசும் போல்வார்
தரந்தெரிந்தி யாதொன்றும் சாற்றுவதற் கேற்றவர்காண்

அண்டிப் பயிலுவதற் காகூழில் மாணவன்மால்
கொண்டிக் கவிபுகலல் கொள்வார் குறைகாணர்
ஆன்ற கடல்நீரில் அங்ஙணநீர் சேருதலே
சான்று மெனுமுறுதி தான்.

—R. நாராயண ரெட்டி, *காதப்பள்ளி*

---

உலகுமகிழ் தருகருண குலக்கதிரோன்
மறைந்தனனே உயர்ந்த செல்வத்
தலைமகனை யிழந்தனளோ தமிழ்த்தாயிங்
கெம்போல்வார் தமக்கெந் நாளும்
இலகுமொழி யமுதருளுந் தனித்தெய்வங்
குடிபெயர்ந்த தேயோ என்னுத்
தலமுழுதுந் தழுதழுப்ப வரதநஞ்
சையப்பெருமான் தணந்த வாறே!

இளம்பருவத் தரும்புகின்சொல் நாவிரும்பிக்
குடிபுகுந்தா ளெங்கே சென்றாள்?
வளம்பெறுகின் னமுதநன்னு வீறுகொண்டு
வளர்ந்துயர்ந்தாள் வாழ்வ தெங்கே?
உளம்விரும்பு முமாமகே சுரன்கதிரே
சனைப்பிரிதற் கொல்லாய் கொல்லோ?
களம்நிரம்பக் கேட்குமின்ப மற்றனமற்
றனமிருந்தென் காண்போ மண்ணல்!

—சுகவனம்–சிவப்பிரகாசன், *தோரமங்கலம்.*

# யாரை யார் படைப்பது?

இரா. இளந்திரையன், B. A., (Hons.)

சமூகம் இலக்கிய ஆசிரியனை உருவாக்கி விடுகிறதா அல்லது ஆசிரியன் சமூகத்தை உருவாக்குகின்றானா?–இலக்கிய ஆராய்ச்சியின்போது எழுகின்ற மிகச் சிக்கலான கேள்விகளில் இதுவும் ஒன்று.

விநாடியில் தோன்றி மறையும் காட்சிகளுக்கும், சில விநாடிகளே நீடித்திருக்கும் நிகழ்ச்சிகளுக்கும் நீண்ட வாழ்நாள் அளிக்கும் ஆற்றல்பெற்றவன் ஆசிரியன். "காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து, பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்ப" (முல்லைப்பாட்டு) என்பதுபோல், காட்சிகளைச் "சிரஞ்சீவி"யாக்கிவைக்கும், ஆற்றலை அவன் பெற்றுள்ளான். பல்பிணிச் சில்வாழ்நாள் மனிதரில் சிலரை என்றும் அழியா இயல்பினராக்கிவிடும் சிறப்பும் ஆசிரியனிடம் அமைந்துள்ளது. "உண்டாயிற் பதம் கொடுத்து இல்லாயின் உடனுண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்" (புறம்) எனவும், "எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்" (சிறுபாண்) எனவும் மனிதர்களை அழியா உயிரோவியங்களாக்கிவிடுகிறான் ஆசிரியன். இவை யாவற்றுக்கும் மேலாக, ஓரே குழுவராகவும், விட்ட குதிரையாராகவும், செம்புலப் பெயநீராராகவும், குப்பைக் கோழியாராகவும் விளங்கி, இறவாத் தன்மைபெறும் ஏற்றத்தைத் தனக்குத்தானே தரும் பேராற்றலும் அமைந்துள்ளது ஆசிரியனிடம். இத்துணைப் பெரிய படைப்பாற்றலைப் பெற்றுள்ள ஆசிரியன், சமூகத்தாலேயே உருவாக்கப்படுகிறான் என்பது வியப்பாக இருக்கிறது. எனினும் உண்மை அதுதான்.

இலக்கிய ஆசிரியன் நம் சமூகத்தின் ஒருவனாகப் பிறந்து நம்மில் ஒருவனாக வளர்ந்தவன். நாம் காண்பவற்றையும் கேட்பவற்றையுமே பெரிதும் கண்டு கேட்டு வந்தவன். நமது துய்த்தறிவு(Experience)களில்பெரும்பாலானவை அவனுக்கும் பொதுவானவையே. நமது பழக்க வழக்க நாகரிகங்களிடையி

லேயே அவனும் உழன்றுள்ளான். இவை யாவற்றையும் உட்கொண்டும் உணர்ந்துமே அவன் வளர்ந்திருக்கவேண்டும்.

ஆசிரியனின் படைப்புக்களை எடுத்துப் பார்த்தால் அவன் சமூகச் சூழ்நிலைகளால் படைக்கப்பட்டவன் என்பது தெளிவாகும். இவ்வாறு கூறுவதனால் சமூகத்தில் காண்பவற்றையும் கேட்பவற்றையும் எழுதிவைப்பதே ஆசிரியனின் தொழில் என்று எண்ணிவிடுதலாகாது. சமூகம் காட்டும் அனைத்தையும் உட்கொள்ளும் ஆசிரியன் அது வளமை காட்டும்போது அதை மனமார ஏற்று வளர்கிறான்; அது வறுமை காட்டும்போது அதனை எதிர்த்து வளருகின்றான். இரண்டு வகையான வளர்ச்சிக்கும் ஊட்டம் அளிப்பது சமூகமேயன்றோ?

சிறந்ததை, சிறந்தோரைப் பாராட்ட மறப்பதில்லை இலக்கிய ஆசிரியன். அதுபோலவே இழிந்ததை, தீயவற்றை எதிர்த்து வீறுகொள்ளவும் அவன் பின்வாங்குவதில்லை. மயிலின் நடுக்கங் கண்டு மனமிளகிப் போர்வை ஈந்த பேகனைப் போற்றுகின்ற புலவர்களே, அவன் கண்ணகியைத் துறந்தபோது அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தத் தவறவில்லை! அறத்து வழிப்பட்ட போர் செய்து வாகை சூடும் மன்னர்களை நாத்தழும் புறப்பாடிப் பாராட்டும் கோவூர்கிழார் இளந்தத்தன் காரணமின்றிக் கொல்லப்பட இருந்தபோது, அவனுக்காக வேந்தனிடம் பேசி அவனை மீட்கத் தயங்கவில்லை. இவைபோல் இன்னும் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் இலக்கியத்தில் உண்டு. சமூக நிகழ்ச்சிகள் ஆசிரியனை வளர்க்கும் முறைக்குச்சான்றாக அவை நிலைபெற்றுள்ளன. முப்பெரும் உண்மைகளை உலகுக்குணர்த்தவல்லதான கண்ணகியின் வரலாற்றைக் கேட்ட இளங்கோ சிலம்பை இசைத்ததும், மணிமேகலை துறவில் சாத்தனார் மனம் பற்றியதும் நாடறிந்த செய்திகள். சிலப்பதிகாரத்தில் தமிழகத்தின் அன்றைய வாழ்வே எதிரொலிக்கின்றது. அத்தனை மனிதர்களுக்காகவும் பேசிய இளங்கோ அச்சமூகத்தால் ஊட்டி வளர்த்து உருவாக்கப்பட்டவரென்பதில் ஐயமேது?

இனி, தன் கலையைப் படைப்பதற்கு இலக்கிய ஆசிரியன் கைக்கொள்ளும் கருவி மொழி. மொழியோ வளரும் இயல்புடையது. தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை ஒரே நிலையில் உள்ள மொழி எதுவுமே இல்லை. எனவே தன் மொழி தனது காலத்தில் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே அதைப் பயன்படுத்த வேண்டிய நிலையிலேயே இருக்கிறான் ஆசிரியன், தன் சூழ்நிலையை

மீறி எங்கோ உள்ள ஒரு மொழியில் தன் கருத்துக்களை வெளி யிட்ட ஆசிரியன் எவனும் இல்லை.

தன் காலத்திய மொழி நிலைக்கு உட்பட்ட ஒருவன் அக் காலத்தால் படைக்கப்பட்டவன் என்று கூறுவதில் தவறு இல்லை. தன் இலக்கியப் படைப்பின்போது ஒன்றிரண்டு புதிய சொற்களை அல்லது சொற்றொடர் அமைப்பு முறைகளை வேண்டுமானால் புதிதாக ஆக்கிக்கொள்ள முடியுமே தவிர, தன் காலத்திய மொழி நடையை அடியோடு மாற்றி அமைத்துக்கொள்ள எந்த ஆசிரியனாலும் ஆகாது. கருத்துக்களைப் பொருத்தவரையில் எதிர்த்து வளரவும் ஆற்றல் பெற்றுள்ள ஆசிரியன் மொழி நடையைப் பொருத்தவரையில் தன் காலத்துக்கே உரியவனாக அடங்கிவிடுகிறான். பெரிதும் காலத்துக்கு ஆட்பட்டவனாகவே ஆகிவிடுகிறான்.

இவ்வாறெல்லாம் சமூகச் சூழ்நிலைகளால் உருவாக்கப்படும் ஆசிரியன் தானே சிலவற்றைப் படைக்கும் ஆற்றலைப் பெற்று விடுகிறான். இந்த ஆற்றல் சமூகத்தைப் பற்றிய அவனது எண்ணங்களால் வலுவடைந்து வேறு புதிய சமூகங்களை உரு வாக்கும் திறனை அவனுக்குத் தருகிறது.

சங்கப் புலவர்களில் பெரும்பாலோர் கண்டுவந்த சமூகத் தினின்றும் வேறுபட்ட ஒரு சமூகத்தை நமக்குக் காட்டுகின்றார் திருவள்ளுவர். அவருடைய காமத்துப்பால் கூறும் இல்லறத் தில் தலைவனின் 'பரத்தையிற் பிரிவு' இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் தம் சமூகத்தை ஒட்டியே கள வும் கற்பும் பேசும் அவர் பரத்தையிற் பிரிவு இல்லாத சமூகம் ஒன்றைக் காணவும் பிறர்க்குக் காட்டவும் விரும்புகிறார். அதுவே காமத்துப் பாலாகப் படைக்கப்பட்டுள்ளது. அவ ருக்கு முன்னும் பின்னும் தோன்றியவர்களெல்லாம் சொன்ன காதல் வாழ்வினின்று அவர் மாறுபடுவதனால் அதனை அவரு டைய படைப்பு என்று கொள்ளவேண்டியுள்ளது.

பருத்திப் பெண்டின் பனுவலன்ன' கொழுங்குறை நிண மும் 'தேட்கடுப்பன்ன நாட்படுதேற'லும் உண்டுவந்த மக்கள் சமூகத்தில் புலால் மறுத்தலையும் கள்ளுண்ணாமையையும் வலி யுறுத்தும் வள்ளுவர் கள்ளாலும் புலாலாலும் ஏற்பட்ட இன் னல்களைக் கண்ட சமூகத்தில் எதிரொலியாக விளங்குகிறார்.

இரண்டு கல் தொலைவுக்கு ஒரு குறுநில மன்னன், ஊருக்கு ஒரு தலைவன் என இருந்துகொண்டு, புகழ்தேடும் ஈகைக்குப்

பொருள் தேடவும், தோள்வலி காட்டிக்கொள்ளவும் அடிக்கடி போர்புரிந்துவந்தவர்களிடையே வாழ்ந்தவர்தான்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" .........(புறம்)

என்றெல்லாம் ஓருலகக் குரல் எழுப்பியுள்ளார்.

உலகின் பற்பல முறைகேடுகளையும் கண்டு நொந்து, இத்தனைக்கும் பின்னும் உலகம் அழியாதிருக்கின்றதே என வியந்த ஒருவர்,

"உண்டா லம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே......
.........................................
உண்மை யானே" (புறம்)

என்று பாடுகின்றார்.

இனி, நூற்றுக்கு ஐந்துக்கும் குறைவாகவே பிற சொற்கள் கலந்த தமிழில் தங்கள் நூல்களை இயற்றியுள்ளனர் சங்கப் புலவர்கள். அடுத்துவந்த இளங்கோவடிகளார் சமயக் கருத்துக்கள் அதிகமாக வருவதனால் பிற மொழிச் சொற்களைச் சிறிது அதிகமாகப் பெய்து நூல் செய்துள்ளார். கம்ப ராமாயணக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் தமிழில் வட சொற்களின் கலப்பு மிகுதியாகியுள்ளது. குறவஞ்சி, பள்ளுக்களின் காலம் உருது, தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிச் சொற்களை ஏற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலம் கலந்த தமிழ் துணிந்து உலவிவந்தது.

செய்யுள் அமைப்பு முறையிலும் பண்ணத்தி முதலியன முன்னரே வழக்கிழந்தன. ஆசிரியப்பாவும் வெண்பாவும் சிறப்புற்றிருந்தகாலம் ஒன்று. கலிப்பாவின் ஓசை எங்கும் எதிரொலித்தது ஒரு காலம். பாவினங்களே சிறப்புற்ற பிற்காலமும், சந்தமும் விருத்தமும் சிறப்புற்ற காலமும் தமிழ் வரலாற்றில் தனித் தனியே நிற்கின்றன.

அவ்வக்கால இலக்கிய ஆசிரியர்கள் அந்தந்த மொழி நடைகளையே பெரிதும் பின்பற்றிவந்துள்ளனர். அவர்களின் கருத்துக்களை உருவாக்கிய காலச் சூழ்நிலையே மொழி நடையையும் அவர்கள்பால் ஊன்றச்செய்துள்ளது.

இலக்கிய ஆசிரியன் காலத்தால்—காலத்திய சுற்றுச் சார்பு களால் உருவாக்கப்படுவதனால் அவனது இலக்கியத்தைச் செவ்வனே அறிந்து சுவைக்க, அவன் தோன்றி வளர்ந்த காலத்தைப் பற்றிய செய்திகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். இலக்கியம் ஆசிரியனின் படைப்பானாலும் அதன் பெரும்பகுதி அது தோன்றிய காலத்துக்குரியது. அதையே வேறொரு காலத்திய சூழ்நிலையோடு பொருத்திப் பார்த்தால் அது மாறுபட்டுத் தோன்றும். ஆதலின் அவ்விலக்கியத்தை அதன் காலத்தோடு இணைத்தே நுகரவேண்டும்.

ஓராசிரியனின் படைப்பில் அவன் காலத்துக்கு உரிய பகுதி யாது, அதினின்று வேறுபட்டு ஆசிரியன் எண்ணியமைத்த பகுதி யாது என்பவற்றை உணர அக்காலத்திய வேறு பல நூல்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். பலவற்றுக்கும் பொதுவான கருத்துக்கள் காலத்துக்கு முழு உரிமை—நேரிடையான உரிமையுள்ளவை என்றும், ஒரு நூலின் தனிக்கருத்து காலத்தின் தூண்டுதலால் ஆசிரியன் அமைத்துத் தந்தது என்றும் கொள்ள வேண்டும்.

இத்தகைய முறைகளைப் பின்பற்றிப் படிக்கும்போதுதான் இலக்கியமும் வரலாறும் இரட்டைக் குழந்தைகள் என்னும் உண்மை புலப்படும். காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை ஆசிரியன் முன்கூட்டியே எண்ணிப்பார்த்துள்ள திறனறிந்து பாராட்டவும் இம்முறை பயன்படும். நம் சமூக வரலாறு என்னும் பெருங்கோட்டையைக் கட்டி முடிக்க உறுதி வாய்ந்த கற்களும் இறுகப் பிணைக்கும் சாந்துமாக நமது இலக்கியங்களைப் பயன்படுத்தமுடியும். அதற்கு உரிய ஒரே வழி நமது இலக்கியத்தின் வரலாற்று முறை ஆராய்ச்சியேயாகும். இப்பழக்கம் வலுவடைந்தால்தான், ஆசிரியர்களுக்குத் தெய்வத் தன்மை ஏற்றி, அவர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த சமூகத்துக்கும், அவர் செய்த இலக்கியத்துக்கும் தொடர்பில்லை என்று வீண்வாதஞ் செய்யும் சிலரது பிடிவாதமும் மறையும். வாழ்க்கையின் ஆராய்ச்சியே இலக்கியம் என்னும் பேருண்மையும் அப்போதுதான் நம்மனோரிடை வலுப்பெறும்.

# திருவண்ணுமலைக் கல்வெட்டுப் பாடல்.

**வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்,**
ஆராய்ச்சியாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

இது, திருவண்ணுமலைக் கல்வெட்டுக்களில் ஒன்று. நூற்று முப்பத்தாறு அடிகொண்ட நேரிசையாசிரியப்பா என்னும் பாடலாலமைந்தது. கோப்பெருஞ்சிங்கரும் அவரது புதல்வரும் அண்ணுமலையார்க்கும், உண்ணுமுலையார்க்கும் முருகக் கடவுளுக்கும் அமைத்த திருப்பணிகள், ஆடையாபரணங்கள், தோப்பு, ஏரி, குளம் முதலிய அற நிலையங்கள்பற்றியும் எடுத்துக் கூறுவது. இவற்றிற் பலவற்றிற்கு அரசராகிய தமது பெயரை இட்டு அவனியாளப் பிறந்தான் திருவாசிகை என்று வழங்கியது முதலியவை கவனிக்கத்தகும். இதில் காணப்படும் தோப்பு, குளம் முதலியவற்றிற் சில விசேட தினங்களில் கடவுள் எழுந்தருளி உற்சவங்கொண்டருளுவதற்கு வகுத்தவை. ஏனையவை மாந்தர் நன்மைக்கென வகுக்கப்பட்டவை என்பதனையும் இப் பாடல் குறிப்பிடுகின்றது. இதில் அருணுசலமுடைய மகா தேவரைக் "**கண்ணூரமுதர்**" எனக்கூறுவது திருவாசகத்தில் "அண்ணுமலையெம் அண்ணு போற்றி கண்ணூரமுதக் கடலே போற்றி" என வருவதில் உள்ள தொடராகும்.

சோப்பெருஞ்சிங்கதேவன், பல்லவர் பெருமாள், சகல புவனச் சக்கரவர்த்தி, அவனியாளப் பிறந்தான், குரை கழற் காடவன், பரதம் வல்ல பெருமாள், நிச்சங்கன் என்று கூறிக் கொள்கின்றனன். நிச்சங்கன் என்பதற்கு அகப்பற்று, புறப் பற்று அற்றவன் என்று பொருள் கூறுவதிலும், பிறருதவி வேண்டாதவன் (அசகாயசூரன்) என்று பொருள் கொள்ளுதலே நன்று.

அவன் புதல்வன் காடவகுமாரன், காங்கயன், ஆட்கொண்ட தேவன், அவனியாளப் பிறந்தான், வேணுவுடையான் என்ற பட்டம் உடையவன். கொங்கு நாட்டில் தாராபுரம் தாலுகாவில் பண்டையரசராற் சிறப்புப்பெற்ற ஒரு குடும்பத்தினர் இன்றும் வேணுவுடையாக் கவுண்டர் எனக் கூறிக்கொள்கின்றனர். வேணுவுடையார் என்பது வேணுடையார் என்ற தொடரின் மரூஉ. கொடுந் தமிழ் நாடுகளைக் கூறும் வெண்பா ஒன்றில் "தென் பாண்டி குட்டங் குடம்கற்கா வேண் பூழி"........ வேண்நாடு எனக் கூறப்படுவதும் இதுவே.

---

* Taken from the south Indian Inscription volume VIII.

ஸ்வஸ்திஸ்ரீ

கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்
சொன்மறை யரக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணு ரமுதர்
அருணை மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்
காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமுஞ்
செங்கதி ரெறிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற் பலதொழில்
திருவுடை யாடையுந் திருக்கழற் கீழிடும்
பெந்த பாதமும் பிறங்கிருட் கண்டமும்
இளஞா யிற்றி னெழினிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தார்
திருவா சிகையுஞ் சிங்கா சனமுங்
கற்பக விருக்கமு முத்தின் பந்தலும்
ஓடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னுந்
திருவா சிகையுஞ் சிறந்தசெங் கதிரொளி
விளங்குமா ணிக்கமுந் துளங்கும் வயிரமுங்
கட்டிய பொலன்தருக் கூடமஞ் சனமுங்
கண்ணு ரமுதர் காமக் கோட்டத்
துண்ணு முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிறைத்த திருவுடை யாடையும்
வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியும் தேவியர் மேனியும்
பைந்நிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவும்

அடி 1. அரசரைத் திருமாலாகவே கூறும் வழக்குண்மை அறிக.

அடி 11. காதிற் கம்பி — திருவேடமென்னும் ஓரணி. மடங்களில் துறவிகள் அணிவது. திருவாரூர்த் தியாகராசப் பெருமானுக்குக் 'கம்பிக் காதழகர்' என்னும் பெயருண்மை அறிக.

மல்லை காவல னிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி இவன்மகன்
வாடா வாகைக் காடவ குமாரன்
வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மேவுகை யுடையவன்
எண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் வீர ரசனி
கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவர்
ஆரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசயமும் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகங் கடந்த காங்கயன்
கண்ணா ரமுதர் கனங்குழை பாகத்
தண்ணா மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையுங் கொடுத்துப் பாவல ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த
வென்றிபுனை தோளாட் கொண்ட தேவன்
வேணா வுடையா னென்னும் பெயரான்
நீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையுந்
திருவமு தேற்றும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்த திருக்காக் கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண் டபமுஞ் செழுமலர் தொடுத்த

---

அடி 42. தண்டக நாடு—தொண்டை நாடு. பாலி—பாலாறு.

கண்ணிவா டாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெறிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கும்
அடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்த
சிலைத்தளங் கொண்டு செய்த சிலைத்தளமும்
எல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும் பண்டாரமும் பிறைமுடிப் பெருமாள்
இந்நாள் வந்திருந் தமையுந் தோன்றவும்
முன்னா ளளந்த முறைமை காணவும்
வாட்டங் கண்ணியர் மலைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்த
நான்முகத் தொருதனி நாயகி தனக்கும்
அப்படி வகுத்த வணிநெடுந் தெருவுஞ்
செப்பிய கதிரவர் திசைவலம் போதுஞ்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மேலைவகுத் தனைய காங்கயன் மடமுங்
காணிற் பயிலுங் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
யிருமருங் கிரட்டவு மிமையவர் துதிக்கவும்
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்தமு மாகிய
வமுத நன்னதி யனைத்திலுந் தூய
தமிணாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசங்
கொண்ட காடவ குமாரன் தோப்புங்
கவன வெம்பரிக் கதிர்வழி தடுத்த
வவனி யாளப் பிறந்தான் தோப்புந்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுர னடைந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயும்
அம்மை மடமு மைய னேரியும்
வெற்பகந் துளைத்தெனக் கற்புடை யாவி
அடனெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறும்
அளிமுரல் கமலமு மாம்பலு மலர்ந்து

# கால்டுவெல் கண்காணியாரின் சறுக்கல்கள்.

## 1. தமிழ் வேற்றுமையமைப்பு.

[ ஞா. தேவநேயன். ]

எமக்குத் தெரிந்தவரை, தமிழிலும் தமிழைப்பற்றியும் இதுகாறும் எழுதியுள்ளவராய் இதுபோது அறியப்படும் நூலாசிரியருள், தொல்காப்பியர், திருவள்ளுவர், கால்டுவெல், மறைமலையடிகள் என்னும் நால்வரே நாயகமானவர். இவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் ஒப்புயர்வற்ற தனிப் பேராற்றலர். ஆயினும், மூவகை நூலிலும் முதனூலே சிறந்தது

---

(137-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளிர்ப்புனற் காடவ குமாரன் தடாகமுங்
குன்றுகரை யன்னக் கோடுயர் நெடுங்கரை
வென்றுமலை கொண்ட பெருமா ளேரியுஞ்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பாதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞ்சிமி ழூர்க்கு மடவிளம் பாளை
விசைகமழ் வீர ராயந் தோப்புங்
......... ...ற்குச் செய்து கொடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்
விச....... ...சைநிச்சங்க மல்ல னேரியும்
காங்கயன் தடாகமும் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
இவ்வகை யாவையுஞ் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் ஆர்க்குங் கண்ணினர்
அணிந்த நீற்றின ராகம நன்னெறி
படிந்த நெஞ்சினர் பரசம யங்களைக்
கடிந்த வாணையர் கண்ணுதற் பெருமான்
ஆதி நாதனாய் வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மந்நா ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதரர்
ஆதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவருந்
திருவரு ளிவன்மேல் வைத்தனர்
இருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

தது என்னும் முறைமை நோக்கின், திருவள்ளுவரும் கால்டுவெலும் ஏனையிருவரினும் திகழ்ந்து தோன்றுவர்.

இலக்கணத்தினும் வேறாக மொழி நூல் என ஒரு தனி நூல் அறியப்படாதது, நாவலந்தேய மொழிகளெல்லாம் தேவமொழியான சமற்கிருதத்தின் திரிபென்று பெரும்பால் தமிழராலுங் கொள்ளப்பட்டிருந்த காலத்தில், திராவிடமொழி இத்துணை என வகுத்துக் காட்டியும், அவை ஆரியத்தினும் வேறெனப் பிரித்துக்காட்டியும், திராவிட மொழித்துறைத் திண்ணிருளைப் போக்கிய மேலைக் கதிரவன் கால்டுவெல் கண்காணியாராவர். ஆயினும், "ஆனைக்கும் அடி சறுக்கும்" ஆதலின், பிராமண வருகைக்கு முந்திய பழந்தமிழ் நூல்களெல்லாம் இறந்துபட்டு, ஆயிரக்கணக்கான தூய தென் சொற்கள் அழிவுற்று, பல்வேறு துறையிலும் தமிழர் தாழ்வுண்டு, தொல்காப்பியம் உள்ளிட்ட சங்கநூற்பயிற்சி குன்றி, குமரி நாட்டுண்மை மறைந்திருந்த பெருவழுக்கலில் வழிகாட்டியின்றிச் செல்லவேண்டியிருந்ததால், இரண்டோர் இடத்தில் அவர் சறுக்கிவிழ நேர்ந்தது. எனினும் அது எட்டுணையும் அவரது அருந்தொண்டின் பெருமையைக் குறைக்காது. தவறுவது மாந்தன் இயல்பே. ஆராய்ச்சியில்லாத மாணவரின் ஐயமறுத்தற் பொருட்டே, அவருடைய சறுக்கல்கள் இங்கு எடுத்துக் காட்டப்பெறுகின்றன என்க.

காட்டப்பாடுள்ள காரணம்பற்றி, திரவிடத்திலுள்ள இலக்கணமுள்ளிட்ட எல்லா உயர் நூல்களும் கலைகளும் ஆரியமொழியின எனத் தவறான முன் முடிபுகொண்டுவிட்டதினாலேயே, தமிழ் இலக்கண வேற்றுமையமைப்பு வடமொழியிலக்கண வேற்றுமையமைப்பைத் தழுவியதெனப் பின்வருமாறு தவறாக வரைந்துள்ளார் கால்டுவெல் கண்காணியார்.

"திரவிட மொழிகளின் வேற்றுமையமைப்பின் கூறுபாட்டை ஆயப்புகுங்கால், திரவிட இலக்கணியர் அவற்றை ஒழுங்குபடுத்தியுள்ள முறையையே கையாள்வோம். அது சமற்கிருத முறையே. இவ்வகையில் சமற்கிருதத்தைப் பின்பற்றியது உண்மையில் வழுவே. ஏனெனின், சமற்கிருதத்தில் எட்டே வேற்றுமையிருக்க, தமிழ் தெலுங்கு முதலியவற்றிலுள்ள வேற்றுமை யெண்ணிக்கை பெரும்பாலும் திட்டமற்றதாயிருக்கின்றது. ஒரு பெயரின் ஈற்றில் சேர்க்கப்பெறும் ஒவ்வொரு பின்னொட்டும், சரியாய்ச் சொன்னால், ஒரு புது வேற்

1. திரவிட ஒப்பியல் இலக்கணம் (சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பு) பக்கம் 254—255.

றுமையாகின்றது. அதனால் அத்தகைய வேற்றுமைகளின் எண்ணிக்கை, பேசுவோனின் தேவையையும் அவன் வெளிப்படுத்த விரும்பும் பல்வேறு நுண்பொருள் வேறுபாட்டையும் பொறுத்துள்ளது. விதப்பாக, சில வேளைகளில் வேற்றுமைத் திரிபு என அமைக்கப்பெறும் வேற்றுமையடி, சிலவிடத்துக் கிழமைப் பொருளும், சிலவிடத்து இடப் பொருளும், சிலவிடத்துப் பெயரெச்சப் பொருளும் தருவதால், அது ஒரு தனியிடம் பெற்றிருத்தல் வேண்டும். உடனிகழ்ச்சி வேற்றுமையும் அன்னமே. (வேற்றுமையடியையுங் கருவி வேற்றுமையையுங் காண்க.) இங்ஙனமிருந்தும், திரவிட இலக்கணியர் வழக்கம் வேற்றுமையெண்ணிக்கையை எட்டாக வரையறுத்திருக்கின்றது. இவ்வொழுங்குபாட்டிற் பல வசதிக் குறைகளிருப்பினும், நாம் புகவிருக்கும் கூறுபாட்டாய்வில் பொதுவான வழக்கைத் தழுவுவது தெளிவுணர்ச்சிக்கேற்றதாயிருக்கும். தமிழ் இலக்கணியர் சமற்கிருத வேற்றுமையொழுங்கைப் பின்பற்றுங்கால், கொடை வேற்றுமை நீக்கவேற்றுமை எனப் பொருள்பற்றிப் பெயரிடாமல், எண்பற்றியே சமற்கிருத முறையைத் தழுவிப் பெயரிட்டிருக்கின்றனர். அவர், சமற்கிருதத்திலுள்ள வரிசைப்படியே, முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை என எட்டாம் வேற்றுமை வரையும், ஒவ்வொரு வேற்றுமைக்கும் முன் ஓர் எண்ணையிட்டிருக்கின்றனர். எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை திரவிட வேற்றுமை வரிசையின் தலைப்பில் நின்றாலும், இம்மொழிகளால் ஆளப்பெறும் உண்மையான வேற்றுமைகள் திரிவேற்றுமைகளே".

இதன் மறுப்பு வருமாறு:—

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"
"விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"

எனத் தொல்காப்பியம் (546, 547) பொருள்பற்றி வேற்றுமை எட்டேயெனத் திட்டமாய் வரையறுத்துக் கூறுவதால், திரவிட வேற்றுமை யெண்ணிக்கை திட்டமற்றது எனக் கூறுவது பொருந்தாது. தொல்காப்பியத்தின் வழி நூலான நன்னூலும்,

"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றுப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" என (291)

வரையறையேகாரங்கொடுத்துக் கூறுதல் காண்க.

(2) வேற்றுமையுருபு, அசையுருபு சொல்லுருபு என இருதிறத்தது. அவற்றுள், சொல்லுருபுகள் அசையுருபுபோல் திட்டமுற்றவையல்ல. ஒரு வேற்றுமைக்குரிய பொருள்படும் சொல்லெல்லாம் அவ்வேற்றுமையுருபாக வரும். பொருள்பற்றி

வேற்றுமையேயன்றிச் சொல் அல்லது உருபுபற்றி வேற்றுமையன்று.

“ஏழாகுவதே
கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி”

என முதற்கண் ஒரே சொல்லுருபு கூறிய தொல்காப்பியர் (தொல். 565) பின்பு,

“கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்”

என அதனைப் பிற ஒருபொருட் சொற்களோடுஞ் சேர்த்து விரித்துக் கூறியமை காண்க.

இனி, இதனையே, நன்னூலார்,

“கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதேம் உழைவழி உழியுளி
உள்அகம் புறமில் இடப்பொரு ளுருபே”

என (302)ப் பெருக்கிக் கூறியதும் காண்க.

(3) ‘காட்டு’, ‘மரத்து’, என்பன போன்ற வேற்றுமையடிகள் ஒரு வேற்றுமையுருபும் பெறாது தொகை நிலையாயிருப்பதால், 6-ஆம் வேற்றுமைக்கும் 7-ஆம் வேற்றுமைக்கும் பொதுவாயிருக்கின்றன. இதனால், அவற்றை மயக்க வேற்றுமையெனக் கோடல் தகாது. ஒவ்வொரு வேற்றுமையும் வெவ்வேறுருபுகொண்டு ஒழுங்குள்ளதாக ஆசிரியரால் எழுதப்பெறும் சமற்கிருதத்திலும், பல வேற்றுமைகள் ஒரே வடிவு கொள்கின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| எ. டு: | மன: | = | மனம் | —1-ஆம் வே. |
| | ,, | = | மனத்தை | —2-ஆம் ,, |
| | மனஸ: | = | மனத்தினின்று | —5-ஆம் ,, |
| | ,, | = | மனத்தின் | —6-ஆம் ,, |
| | மனோப்யாம் | = | இரு மனங்களால் | —3-ஆம் ,, |
| | ,, | = | இருமனங்கட்கு | —4-ஆம் ,, |
| | ,, | = | இரு மனங்களினின்று | —5-ஆம் ,, |
| | மனோப்ய | = | பல மனங்கட்கு | —4-ஆம் ,, |
| | ,, | = | பல மனங்களினின்று | —5-ஆம் ,, |

கிழமை வேற்றுமைப் பெயர்களெல்லாம் பெயரெச்சப் பொருள்படுதலின், ‘காட்டு’, ‘மரத்து’ என்பன போன்ற சொற்கள் பெயரெச்சமாய் ஆளப்பெறுவது ஒரு வியப்பன்று

ஆங்கிலத்திலும் possessive adjective என அழைக்கும் வழக்கமுண்மை காண்க.

(4) 3-ஆம் வேற்றுமையும் 5-ஆம் வேற்றுமையும் பல பொருள்கொண்டுள்ளவைபோலத் தோன்றினும், அவை உண்மையில் ஒரு பொருள்கொண்டவையே.

2-ஆம் வேற்றுமைக்குரிய கருவி வினைமுதல் உடனிகழ்ச்சி ஆகிய மூன்றனுள், முதலிரண்டும் ஈற்றதைத் தழுவியவையே. ஒருவன் ஒரு கருவியால் ஒரு கருமம் அல்லது பொருள் செய்யும்போது, அக்கருவி அவனொடுகூட இருத்தல் காண்க. வினைமுதல் முதல் வேற்றுமை (எழுவாய்)வடிவிற் கூறப்படாது 3-ஆம் வேற்றுமை வடிவிற் கூறப்படின் கருவி நிலையடைந்துவிடுவதால், வினைமுதலும் கருவியோடொக்கும். கருவியும் உடனிகழ்ச்சியும் ஒருபாற்படுவதினாலேயே, இருசார் 3-ஆம் வேற்றுமையுருபுகளும் இரு பொருளிலும் மயங்குகின்றன என அறிக.

எ. டு: (ஆல்) ஆன்—உளியாற் செதுக்கினான் (கருவி)
" " —ஊரானொரு தேவகுலம் (உடனிகழ்ச்சி)
ஒடு (ஓடு,உடன்)—நாயொடு நம்பி வந்தான்"
" " — மண்ணொடு குயின்றகுடம் (கருவி)

ஆங்கிலத்திலும்,

I see with my eyes } Instrument
I write with my pen }
I came with my son — Conjunction.

என ஒடுச்சொல் இரு பொருளிலும் வருதல் காண்க.

இனி, 5-ஆம் வேற்றுமைப் பொருள்களாகிய நீங்கல் ஒப்பு எல்லை ஏது என்னும் நான்கனுள், இறுதி மூன்றும் முதலதன் நுண் வேறுபாடுகளே.

ஒப்பு என்பது உவமப்பொருவு உறழ்பொருவு என இரு திறப்படினும், 5-ஆம் வேற்றுமைக்குரியது உறழ் பொருவே யாகும். "காக்கையிற் கரிது களம்பழம்" என்பது 5-ஆம் வேற்றுமையாய் பல காக்கையைவிடக் கரிது என்றே பொருள் படும். காக்கையைப்போலக் கரிது என்னும் பொருள் 2-ஆம் வேற்றுமைக்குரியதாம். "கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி" என்பனபோன்ற தொடர்களெல்லாம் உறழ் பொருவுற்று 5-ஆம் வேற்றுமைக்கேயுரியனவாம். ஒரு வகையில் ஒப்புமைகொண்ட இரு பொருள்களுள், ஒன்று உறழ்ந்து அல்லது விஞ்சி நிற்பின் ஒப்புமையினின்று நீங்குதல் காண்க.

இனி, 'தில்லையின் வடக்கு சென்னை' என்பதில் இட வகையான நீங்கற்பொருளும், 'வாணிகத்தின் ஆயினான் வடி

வேல்' என்பதில் நிலை வகையால் நீங்கற் பொருளும் இருத்தல் காண்க. இங்ஙனம் 5-ஆம் வேற்றுமைப் பொருள்களெல்லாம் நீக்கப் பொருளேயாதல் நோக்கித்தெளிக.

ஏனை வேற்றுமைகளெல்லாம் ஒவ்வொரு பொருளே கொண்டனவென்பது, எல்லார்க்கும் தெளிவாம்.

(5) இதுபோதுள்ள தமிழிலக்கண நூல்களுள் முதலதான தொல்காப்பியம்,

"அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற" என

(548) வேற்றுமைகளைப் பொருள்பற்றி வரிசைப்படுத்தி உருபு பற்றிப் பெயரிட்டழைக்கின்றது.

இனி, "அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே"
(தொல். 549)

"இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல்555)

"மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 557)

"நான்கா குவதே
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 559)

"ஐந்தா குவதே
இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 561)

"ஆறா குவதே
அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 563)

"ஏழா குவதே
கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 565)

"விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப" (தொல். 603)

எனப் பிற்பட்ட நூற்பாக்களிலும் முற்கூறிய முறையையே முதன்மையாகக் கையாளுதல் காண்க. நன்னூலாரும் தொல்காப்பியரை அடியொற்றியே வேற்றுமைகளைப் பெயரிட்டழைக்கின்றார்.

எழுவாய் எனினும் பெயர் எனினும் ஒக்கும்.

இங்ஙனம் பொருளை அடிப்படையாகக்கொண்டு உருபுபற்றி வேற்றுமைகளை வரிசைப்படுத்திக் கூறும்போதே, எண் முறை பற்றிப் பெயரிட்டாளுதற்கும் தோற்றுவாய் செய்துள்ளது

தொல்காப்பியம் அல்லது அதன் முன்னூலான தொன்னூல். ஆகவே. எண் முறைபற்றி வேற்றுமைகளைப் பெயரிட்டாள்வது தமிழில் தலைமையானதன்றென்பது பெற்றும்.

சமற்கிருத இலக்கணம் தமிழிலக்கணத்திற்குப் பிற்பட்டதினும் அதன் வழிபட்டதினும், தமிழ்முறையைப் பின்பற்றி, பின்வருமாறு வேற்றுமைகளை வகுத்துக் கூறுகின்றது.

| வேற்றுமை. | | பொருள். |
|---|---|---|
| 1. பிரதமா | விபக்தி | கர்த்தா (வினைமுதல்) |
| 2. துவிதீய | ,, | கர்மம் (செய்பொருள்) |
| 3. திருதீய | ,, | கர்த்தா, கரணம் (கருவி) |
| 4. சதுர்த்தீ | ,, | சம்பிரதானம் (கொடை) |
| 5. பஞ்சமீ | ,, | அபாதானம் (நீக்கம்) |
| 6. சட்டி (ஷஷ்டி) | ,, | சம்பந்தம் (தொடர்பு) |
| 7. சப்தமீ | ,, | அதிகரணம் (இடம்) |
| 8. சம்போதன | ,, | சம்போதனம் (விளி) |

தென்மொழி வடமொழிகளின் முன்மை பின்மையையும் முதன்மை வழிமையையும் அறியாமையால், தமிழிலக்கணம் சமற்கிருத விலக்கணத்தைப் பின்பற்றியதெனப் பிறழக் கூறினர் கால்டுவெல் கண்காணியார் என்க. தென்மொழியிலக்கணம் குமரி நாட்டில் தோன்றியது கி. மு. பத்தாயிரம் ஆண்டுக்கு முன் என்றும், அதனைப் பின்பற்றி வடமொழியிலக்கணம் தோன்றியது கி. மு. ஈராயிரம் ஆண்டுக்கு முன் என்றும் அறிதல் வேண்டும்.

(6) வேற்றுமை உண்மையில் ஏழேயாயினும், பெயரின் எண் நிலைகளுள் பெரும்பாலன வேற்றுமைப் பட்டவையாதலாலும், இயல்பான பெயரும் பிறவற்றோடு ஒப்பு நோக்க வேற்றுமைப்படுதலானும், வேற்றுமை எட்டெனக் கூறப்பட்டன.

ஒரு பொருளுக்கு இடும்பெயர் அதனை எழுவாயாக ஆளுதற்கேயாதலின் இயல்பான பெயரை முதல் வேற்றுமையாகக் கொள்வதே மொழியின் இயற்கை நிலையாம். இதற்கு மாறாக முதல் வேற்றுமைக்கும் திரிபெயர்கொள்வது திரிபுடைமொழியின் இயல்பென்க.

"கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

சென்ற இதழின் தொடர்ச்சி.

# கரந்தைக் கோவை.

[வித்துவான், ச. பாலசுந்தரம்.]

### தன் மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

336 பஞ்சூட் டியவடிப் பார்க்குமுன் சேக்கும் பதத்துடன்கார்
மஞ்சூட் டெனத்தமிழ் மாரு தளித்து மகிழ்கரந்தைச்
செஞ்சூட் டிளவனச் சேவடி யாளொரு சேயுடனே
வெஞ்சூட் டிரும்பரற் பாலேயில் யாங்ஙனம் மேவினளே

### இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கல்.

337 சேரும் வளியிழைச் சிற்றில் சிதைக்கச் சிவந்துவிழி
நீரும் பெருக்கிநி லாச்சோ றுணுமல் நெடிதழுவாள்
காரும் நிழலுமில் லாவருங் கானிற் கனிதமிழ்நூல்
தேருங் கரந்தையைச் சிந்தைசெய் யாரெனச் சேர்ந்தனளே!

### அச்சத் தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

338 கந்தழி யேயிறை என்னுங் கரந்தைநற் காளையுடன்
பந்திமி குந்தெழும் பாறுசெந் நாயுழல் பாலேவழி
மந்திம ரக்கிளே மாறுதல் காணின் மனநடுங்கிக்
கொந்தும லர்ப்புகுங் கோல்வளே எங்ஙன் குறுகினளே?

### கண்டோர் இரக்கம்.

339 வனேகோல் கெடுத்தநல் லோவியன் போல வளர்த்தவளோ
டனேகே டுறத்துணே ஆயமெல் லாந்தமிழ் ஆர்கரந்தை
நினேயா ரெனத்துயர் நீடமுன் நீங்கா தழுக்கறுப்பார்
வினேகோ லுளம்புரை வெஞ்சுரத் தேனிவர் மேவினதே?

### ஆற்ருத் தாயைத் தேற்றல்.

340 அழியாப் பிறமொழி ஆக்குங் கருத்தை அறிந்துதமிழ்
மொழியாக் கிடத்திசை முற்றுந் திரிந்து முயன்றுமுடித்
தொழியாப் புகழ்க்கரந்தைப்புல வோரென ஊர்தொறும்போய்
பிழியாக் கரும்பினேப் பெற்றன்றி மீள்கிலன் பேதுறலே.

---

336. பஞ்சூட்டிய—செம்பஞ்சுக்குழம்பூட்டுவதற்காக. சேக்கும்—அச்சத்தால் செவக்கும். பதம்-பாதம். மஞ்சூட்டுஎன-மழைபயிர்க்கு ஊட்டுதல்போல. செஞ்சூட்டு-செவந்த உச்சிக்கொண்டை. பரல்-கற்கள். 337. சேரும்...அழுவாள்-இயல்பாக அடிக்கும் காற்ருல் இழைத்த சிற்றில் சிதைய அறியாமையால் கண்ணீர் பெருக்கி அழுவாள். 338. கந்தழி-பற்றுக்கோடற்ற நிலே. பந்தி-வரிசை. பாறு-கழுகு. மந்தி-பெண்குரங்கு. 339. வனேகோல்-தூரிகை. ஆயமெல்லாம் துயர்நீட எனவும் முன்மேவினதே எனவும் இயையும். 340. அழியாக் கருத்தென இயையும், புகழ் ஒழியா என மாறுக. பிழியாக்கரும்பு-தலேவி. பேதுறல்-எதிர்மறைவியங்கோள்

**ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல்.**

341 ஒன்றி யிருந்துமுன் நான்குறி யாமையை உன்னியிவ்வா
றின்றெழு வாளென எட்டுணை யுந்தெரி யேன்நவமாய்த்
துன்றிய மாதவத் தீர்கரந் தைத்தமிழ்த் தோகையவள்
வன்றிற லாதபத் தான்வளர் பாலையில் வந்தனளே?

**மிக்கோர் ஏதுக் காட்டல்.**

342 பொதியிற் பிறந்துமுச் சங்கமென் தொட்டிலிற் போர்ச்செழியர்
நிதியின் வளர்ந்தநம் தெய்வத் தமிழ்மகள் நேயமிகப்
பதியிற் சிறந்தொளிர் பைங்கரந் தைமணம் பற்றினள்முன்
விதியிற் கிடந்ததை வேறுசெய் வாரெவர் மேன்மகளே?

**இதுவுமது.**

கடிமலர் தீங்கனி கார்முகில் முத்தங் கறங்கருவி
செடிமரம் வான்கடல் சேர்மலைக்கென்பயன் செய்யுமிரு
அடிமலர் கன்றவுன் ஆயிழை சேர்ந்ததும் ஆங்கதுவால்
படிமிசை வாழ்வியல் என்பார் கரந்தைநற் பாவலரே.

**செவிலி எயிற்றியொடு புலம்பல்.**

343 செயிற்றியஞ் சீர்குண நூல்முத லாயவை சென்றிடினும்
பயிற்றிய முத்தமிழ் செய்வார் கரந்தைப் பதியனைய
எயிற்றி நல்லாயொரு காளைபின் இவ்வழி ஏகினளோ?
இயற்றிய பாவையொக் கும்மென தாருயிர் ஏந்திழையே.

**செவிலி குரவொடு புலம்பல்.**

344 "சுழலும் மனத்துடன் தாயுமிவ் வாயமும் சோர்வுகொளக்
கழலுங் கணைவிலும் தாங்குங் கரந்தையக் காளையுடன்
அழலுஞ் சுரத்தக லேல்!"எனக் கூற அறிவிந்ழதாய்
நிழலும் மலருமுன் நேர்குழற் கீந்த நெடுங்குரவே!

**சுவடுகண் டிரங்கல்.**

345 கமழுங் கரந்தைத் தமிழ்க்கா ரிகைமுன் கழிநெடிலாய்த்
திகழும் நெடிலடி காளை,பின் நேரடி சிந்தடிமான்,
புகழும் படியிரு சீரடிப் பாங்கர் பொசிந்தவடி
நிகழும் விலங்கடி நேராத வேடர்தம் நெட்டடியே.

---

341. நான்குறியாமையை—ஆராயாதிருந்தமையை. உன்னி—கருதி. நவம்-புதிது. ஆதபம்-கதிரவன் இப்பாடல் எண்ணலங்காரம். 342. நிதியின்-செல்வம்போல் வேற்றுப்பொருள் வைப்பணி. ஆங்கது-அத்தன்மையது. இப்பாடல் நிரனிறையணி. 344 குரவு-குராமரம். 345 காரிகைமுன் கழிநெடிலாய்த்திகழும் நெடிலடி காளை—தலைவியின் அடிச்சுவற்றிற்கு முன்பாக மிகநீண்டுதெரியும் பெரிய அடிதலைவன் அடிச்சுவடே. சிந்தடிமான்—சிறிய அடியாய்த்திகழ்வது மான்போன்ற தலைவியின் அடிச்சுவடு இருசீரடி—அழகிய இருவகை அடிகள். பாங்கர்—பக்கம். பொசிந்த—கலந்த. நேராத—பகையாகவந்த. நெட்டடி—தோற்றுேடிய அடி அடிகள்யாவும் ஆகுபெயர்கள்—இதனுள்குறளடி முதலாக ஐந்தடிகளும் தொனியாகவந்தன, சொற்பொருள் பின்வருநிலையணி.

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டுகேட்டல்.

346 இமையும் விழியும் எனவரு வீர்!தமிழ் ஏழிசையும்
அமையுங் கவிதரு வார்கரந் தைப்பதிக் கார்வமுற
இமையம் எனத்துயர் எம்பால் வளர்த்தொரு ஏந்தலுடன்
அமையும் மருளுமென் தோளியு மிவ்வா றடைந்தனரே?.

கலந்துடன் வருவோர் புலம்பல்தேற்றல்.

347 உலம்புனை தோள்வடி வேலன்என் ஒண்ணுதல் ஓர்ந்துரைத்த
சிலம்பணி சேவடி யாளுடன் இன்னுஞ் சிறு பொழுதில்
கலம்பகங் கோவைநற் றேனுலா மாலைக் கவின்தொடையல்
நலம்புனை செந்தமிழ் சேர்கரந் தைப்பதி நண்ணுவரே.

செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல்.

348 உற்றுற்று நோக்கியென் கண்வாள் இழந்தன உன்னியுனி
எற்றெற்றெ னும்முளம் இற்றிற்று கால்தளர்ந் தேங்குறுமால்
பற்றுற்று செந்தமிழ் பாடுங் கரந்தைப் பதியனையாட்
பெற்றுற்ற யேதையட் கெவ்வாறு முன்னின்று பேசுவனே.

## 23. மீட்சி.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

349 ஆயுந் தமிழ்க்கலை அத்தனை யும்முணர்ந் தாழ்ந்ததனுள்
தோயுங் கருத்தைத் துருவும் கரந்தைநற் றுங்கரென
வேயும் பரலும் மிகுஞ்சுரந் தேடியும் வேல்விழியும்
சேயும் புகுநெறித் தேர்ந்திலன் சேர்ந்தனர் சேணகரே.

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்

350 தும்பிப யில்நறுஞ் சோலையி தீங்கிது தொல்கரந்தை
நம்பிய கப்பொருள் நாம்பயில் நல்லிடம் நங்கையர்கள்
பம்பி இசைநடம் கூத்துடன் பாடிப் பயிலிடமீ(து)
அம்பிய லும்விழி யாய்நம தூர்ப்பொது வம்பலமே.

தலைவி முன்செல்வோர் தம்மொடு தான்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்

351 வந்தேன் வனைகழற் காளையோ டென்றுமுன் வன்பிரிவால்
நொந்தே இளைக்குமென் தோழியர்க் குத்தமிழ் நுண்ணறிவால்
செந்தேன் வடிப்பவர் வாழ்கரந் தைப்பதி சேர்ந்துவரும்
கொந்தார் மலர்க்குழ லீர்குமை யேலெனக் கூறுமினே!

---

346. அமையும் மருளும்-மூங்கிலும் அஞ்சும். 347. உலம்-திரண்டகல். பிறர்மனை நோக்காத பேராண்மையனுதலின் சிலம்பணி சேவடி யாள் என்றான் தலைவன் பின் ஒதுங்கிநின்ற காலடி நோக்கி. 348. வாள்-ஒளி. பெற்றுற்றபேதை-முன் பெற்று இப்பொழுது துன்புறும் நற்றாய். 349. துருவும்-ஆராயும். துங்கர்-மேலோர். வேய்-மூங்கில். சேய்-தலைவன். 350. நம்பி-ஒருவரை ஒருவர் உணர்ந்து. பம்பி-செருக்குற்று. 351. தோழியர்க்குக்குமையேல் எனக்கூறுமின் எனக்கூட்டுக.

முன்சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல்

352 நினைந்தவர்க் குப்புகழ் நேருங் கரந்தை நெடுந்தமிழால்
புனைந்தநல் லோவியம் போலொரு பூங்குழல் பொற்றுகளால்
வனைந்தென மேனியோர் வார்கழ லோனுடன் வந்தனள்மான்
இனந்தனை வென்றகண் ஏந்திழை யீர்நும தின்னகர்க்கே.

பாங்கியர் கேட்டுநற்றாய்க் குணர்த்தல்

353 அன்றுபெற் றாய்மக வாகஎம் அன்னாய்! அகம்வருந்தச்
சென்றுவெங் கானிடைச் செம்மல்பின் சேர்ந்து திரும்பியதால்
இன்றுபெற்றாய்மக ளாகவுன் றோகையை இன்கரந்தை
மன்றினிற் செந்தமிழ் தேர்ந்தவர் போலுளம் மாண்புகொளே

நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனைவினாதல்

354 இளிசெய் மொழியுளம் எல்லாம் கவர்ந்தவவ் ஏந்தலென
தொளிசெய் மனைவருமோ அவர்தாய்மனை உற்றிடுமோ
களிசெய் கரந்தைத் தமிழ்நச்சி வள்ளியைக் காதலித்தின்
அளிசெய் துயர்முரு கே!உளங் கோளுரை ஆற்றுகவே.

## 24. தன்மனைவரைதல்

நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல்

355 சேவையர் காவலர் சேக்கிழார் செய்திருத் தொண்டர்தந்நூற்
கோவையின் கோளறி வார்கரந் தைப்பதி கொற்றவன்நம்
பாவையை நம்மனைப் பான்மணம் செய்யப் பரிவுகொள்நம்
தேவையைக் காளையின் தாயிடம் சென்றினிச் செப்புவமே?

செவிலிக்கு இகுளை வரைந்தமை யுணர்த்தல்.

356 தனித்தமிழ் வாழ்கரந் தைத்தமிழ்ச் சங்கத் தனிவிழவில்
இனித்தெழுஞ் சும்மையைப் போற்பல இன்னியம் ஏங்குதல்உன்
பனித்தெழு வார்குழல் பாவைஎன் பாங்கியைப் பண்புடனே
குனித்தவிற் சேய்மணங் கொள்முழக் கேஎனக் கொள்ளுகவே.

வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தல்

357 நடைக்குயர் செந்தமிழ் நாளும் வளர்க்கும் நறுங்கரந்தை
இடைக்குல மாதரும் ஈன்றவர் உள்ளமும் இன்புகொள
அடைக்கல மாகநம் ஆயிழை யாளைநல் லந்தணர்முன்
படைக்கலம் வாய்த்தவன் பாலளித் தாரெனப் பன்னினரே.

---

353. அன்று மகவாகப் பெற்றவளை—இன்று (மறுபிறப்பென்னும்படி) வளர்ந்த மகளாகவே பெற்றாய் என்றார்கள். 354. இளி—ஒரு வகைப்பண். உளங்கோளுரை ஆற்றுக—தலைவன் உட்கருத்தை உரைப்பாயாக. 355. கோள்—கொள்கை. தேவை—விருப்பம். 356. தனிவிழா—சிறந்த விழாக்கள் சும்மை—ஆரவாரம். ஏங்குதல்—ஒலித்தல். 357. நடை—ஒழுக்கம். படைக்கலம் வாய்த்தவன்—போர்வல்லான் என்றபடி. பன்னினர்—சிறப்பித்துக் கூறினர்.

(தொடரும்)

# ஒழுக்க நெறியில் வள்ளுவர்.

வித்துவான். ந. இராமநாதன்.

மலர்தலையுலகில் வாழும் மக்களினத்திற்கு அறம் பாடிய அறிஞராம் வள்ளுவர் தன்னுடைய நூன் முழுவதிலும் விரித்துப் பேசுவது ஒழுகலாறுகளேயாகும். காதலர் வாழ்வுக்கேற்ற ஒழுகலாறுகளைக் காமத்துப் பாலிலும், இல்லறத்தார் ஒழுகலாறுகளை இல்லற இயலிலும், துறவறத்தார் ஒழுகலாறுகளைத் துறவற இயலிலும், அரசியலைப்பற்றிய நடைமுறைகளை அரசியலிலும் குடிமக்கட்கேற்ற நடைமுறைகளை ஒழிபியலிலுமாகக் கூறியுள்ளார். ஆயினும் இல்லற இயலில் "ஒழுக்கமுடைமை" என ஒரு தலைப்பிட்டுப் பேசப்படுகிறது. இவ்வொழுக்கம் பற்றிய செய்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒழுக்கம் என்பது என்ன என்பதை முதலில் நாம் அறிய வேண்டும். இச்சொல்லுக்கு ஒழுகுதல் என்பது பொருள். தொழிலும் குணமெனப்படுதலின், ஒழுக்கம் என்பது பருப் பொருளைக் குறிக்கும் பெயரல்ல என்பதும் நுண் பொருளைக் குறிக்கும் பெயரென்பதும் (Abstract noun) விளங்கும். ஒழுகு, ஒழுகுதல் போன்ற சொற்கள் பெரும்பாலும் நீருக்கும் நீர்போன்ற இயல்புடையவற்றிற்கும் பயன்படுத்தும் வினைச் சொல்லுக்கு அடியாக வருவதைக் காணலாம். "ஆற்றொழுக்கு அரிமாநோக்கம் ." என்று தொடங்கும் நூற்பாவில் நூற்பாக் களின் நிலையை விளக்கவந்த நன்னூலார் யாற்றிற்குரிய வினை யாகப் பெய்திருப்பது ஒழுக்கு அல்லது ஒழுக்கம் என்பதாகும். வழக்கிலும் "யாறு ஒழுகிற்று" "நீர் ஒழுகும்" "நெய் ஒழுகிற்று" என்பன போதிய சான்றுகளாம். ஒழுகும் இயல் புடைய நீரும், நீர்போன்றவைகளும் இருவேறியல்புடையன. ஒன்று இடையறவுபடாது ஓடுதல்; இரண்டு பள்ளங்கண்டவழிப் பாய்தல்; மலைத்தலையில் தோன்றிய காவிரி கடல் வரையிலும் அறுதியின்றித் தொடர்ச்சியாக வருதலைக் காணுகின்றோம்.

மனித வாழ்வும் இடையறவுபடாத வினை நிகழ்ச்சிகளால் ஆயது. உயிர் உடம்பினின்றும் நீங்குங்காறும் மனிதன் ஏதா வது செய்துகொண்டுதானிருப்பான். இதனை அறிய ஒருவனைக் கணந்தோறும் வினவிக்கொண்டேயிருப்போமாயின், இன்னது

செய்கின்றானென விடை வந்துகொண்டே யிருக்கும். இடை யறவுபடா வினை நிகழ்ச்சிகளால் மனித வாழ்வும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதனால் இடையறவுபடாமையென்பது நீருக்கும் மனித வாழ்வுக்கும் உள்ள பொது இயல்புகளுள் ஒன்றென்பதைக் கண்டோம். இனி இரண்டாவதாகக் கூறிய ஒப்புமையைக் காண்போம்,

பள்ளத்து வழி வெள்ளம் தாழ்தல்போல உள்ளத்தின் வழிச் சொல்லும், சொல்லின் வழிச் செயலும் தாழ்ந்தேகுதல் மனித இயல்பாகும். இறையனார் களவியலுரையாசிரியரும் மனத்துவழிக் காதலித்தனர் என்பதை விளக்கும்போது "பள்ளத்துவழி வெள்ளத்தை" உவமித்தனர்... இனிப் பள் ளம் என்பது மனித வாழ்வில் தீய வினைகளைக்குறிக்கும் மறைவுச் சொல்லாகக் கையாள்வதைக் காணலாம். ஒருவன், ஒருவன் வாழ்வுக்குக் குழி தோண்டுகின்றான் அல்லது பள்ளம் பறிக்கின் றானென்றால் தீய வினைகளைச் செய்கின்றானென்பது பொருள். இதனால் வெள்ளம் பள்ளத்துவழி எளிதில் பாய்தல்போல மனித இயல்பும் தீவினைகளின் பக்கல் எளிதில் தாழும் என்பதை நுண் ணிதின் அறியலாம். எனவே, ஒழுக்கம் என்பது நீருக்குள்ள வினையாக இயங்கிப் பின்னர் சார்த்து வகையான் மனித வாழ் வுக்கும் ஆயது என்பதை உணரலாம்.

மனித வாழ்வின் இடையறவுபடாத வினைகளின் தொடர்ச்சி ஒழுக்கமெனப்படும். வினைகளின் தொடர்ச்சி ஒழுக்கமானால் வினைகளில் காணப்படும் நல்வினை தீவினைக் கூறுகள் ஒழுக்கத் திலும் சார்ந்து நல்லொழுக்கம், தீயொழுக்கமென ஆயமையும் உய்த்துணரலாம். திருவள்ளுவரும் நன்றிக்கு வித்தாகும் நல் லொழுக்கம் தீயொழுக்கம், என்று மிடும்பைதரும்" என்ற குறளில் இருவகையான ஒழுகலாறுகளையும் சுட்டிக் கூறுகின் றார். தீயொழுக்கமென விதந்து கூறினாலன்றிப் பொதுவாக ஒழுக்கமென்றால் நல்லொழுக்கத்தையே குறிக்கும். "பரிந் தோம்பிக்காக்க ஒழுக்கம்" "ஒழுக்கமுடைமை குடிமை" என்ற இடங்களிலும் பிற இடங்களிலும் இதனைக் காணலாம்.

நல்வினைகளைத் தொடர்ந்து இயற்றுகின்ற ஒழுக்க நெறி யைவிடச் சிறந்ததில்லை. கல்லாதுபோகிய நாளும், பெரியவர்கண் செல்லாது வைகிய வைகலும், ஒல்வ கொடாதொழிந்த பகலும் இல்லாமல் வாழ்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் நல்ல நூற் களைப் பயில வேண்டும். ஆன்றவிந்தடங்கிய சான்றோர்பால் அடிக்கடி சென்று அறியாதனவெல்லாம் அறிந்துகொள்ள

வேண்டும். ஒன்றைப் புதிதாக அறியும்போதெல்லாம் நமக்கு அறியாமையிருப்பது புலனுகும் என்று வள்ளுவர் கூறிய துய்ப் புரையினை ஈண்டு எண்ணுதல் பொருந்தும். நன்மக்கள் இணக்கமே நல்லொழுக்கத்துடன் வாழ்தற்கு வாயிலாகும். நம்மாலியன்றவற்றை மற்றவருக்குச் செய்யவேண்டும். அழுக்காறு, அவா வெகுளி, இன்னுச்சொல் ஆய நான்கும் இல்லாது இடையருது நிகழும் செயல்கள் யாவும் ஒழுக்கமெனக் கூறலாம். இத்தகைய ஒழுக்கம்தரும் விழுப்பமும் அது இன்மைதரும் இழுக்கமும் நோக்கித் திருவள்ளுவர் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததென்று கூறுகின்ருர். ஒரு குடியில் பிறந்ததினுல் ஒருவருக்குச் சிறப்பு வந்துவிடாது ஒழுக்கமுடைமை இருந்தால்தான் பெருமையுண்டு. வேதமோ அல்லது வேறு மெய்ஞ்ஞான நூல்களோ ஒருவன் கற்ருல் மட்டும் ஒழுக்கமுடையனென்று கூற முடியாது. கற்றதற்கேற்ற ஒழுக்கமின்றேல் அவனுக்கு உயர்ச்சியில்லை. இவ்விரு செய்திகளைச் சுட்டும் குறள்களால் வள்ளுவர் குடிப்பிறப்பையும், கல்வியையும் விஞ்சி அவைகட்கு மேலாக ஒழுக்கம் உள்ள தன்மையை விளக்கினுர். ஒருவனுற் செய்யப்படும் நல்வினைகள் எதிர்காலத்தில் நன்மை வந்தடைவதற்கு வித்தாக ஆகின்றதென்ருர். இதுபோலவே தீவினைகளை ஆற்றுபவர் தீய பயன் அடைய வித்திட்டார் என்பதே பொருளென்ருர். இதனுல் உயிர் நிலைத்து வினை வித்திட்டார்க்கு விளைவும் அதுவாகவே முடியுமென்பதைத் தெள்ளிதின் உணரலாம். "நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்" என்னும் வள்ளுவர் வாக்கு ஈண்டு நினைதல் தகும்.

திருவள்ளுவர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகார இறுதியில் கூறும் குறளின் கருத்தும் பரிமேலழகர் உரையும் மிகவும் சிறந்துள்ளன. ஆதலின் அவ்விரண்டினையும் விளக்கி இக்கட்டுரையை முடிப்பாம்.

கற்றல் என்ருல் ஒழுகுதலை அதாவது தொடர்ந்து நல்வினைகளை ஆற்றுதலைக் கற்றல் என்பதே பொருளாம் ஒழுகுதலாகிய நல்வினைகள் என்ன என்பதை விளக்கும்போது "உலகம் ஒப்பக்கூடியவை"தான் நல்வினைகளாகும். உலகம் என்பது இங்கு உயர்ந்தோர் என்னும் பொருளுடையது. கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த மேலோர் கூறும் நற்செயல்களே ஒழுக்கங்களாகும். இவைகள் காலந்தொறும் மாறுபடும். இதனைப் பரிமேலழகர் அறநூல் சொல்லிய ஒழுக்கங்களில் இக்காலத்திற்கு ஏலாதவற்றை நீக்கிவிடலாம்; ஏற்கும் ஒழுகலாறுகளைக் கைக்கொள்ளலாம் என்ற இவ்விரு கருத்துக்களும் தோன்றத்

திருவள்ளுவர் "உலகத்தோ டொட்ட ஒழுகல்" என்று கூறினரென்பர். நல்வினைகளின் தொடர்ச்சியாய ஒழுகலாறுகள் காலந்தோறும் மாறுபடுகின்றமை கருதித்தான் வள்ளுவரும், பரிமேலழகரும் இன்னவைதாம் நல்லொழுக்கம் என்று வரைந்து கூறாது சென்றனர் என்று எண்ண இடமுள்ளது. ஒழுகுதலைக் கல்லாமல் ஏட்டைப் புரட்டி வாயளவில் பயிலும் கற்றல் கற்றலல்ல என்பதும், இவ்வாறு கற்றவர் பலகற்றேம் என்று பெருமைகொள்ளுதற்கில்லை என்பதும் வள்ளுவர் கருத்துப்படி இத்தகையோர் அறிவிலார் தொகையில் சேர்க்கப்பெறுவரென்பதும் கீழ்க் குறிக்கப்பெறும் குறளால் அறிகின்றோம்.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்".

---

# கையறவு.

சங்கப் பேரன்பரும் கூலவாணிகப் பெரியாருமாகிய கரந்தை **திரு. நா. லெ. சின்னகிருட்டின நாயடு** அவர்கள் 15–8–56ல் மறைந்தமைக்குப் பெரிதும் வருந்துகிறோம். அவர்களது மக்கட்கும் உடன் பிறந்தார் (சங்கப் பொருளாளர்) திரு. நா. லெ. வரதராசலு நாயடு அவர்கட்கும் சங்கத்தின் சார்பாக எங்கள் உண்மை ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*

சங்க உறுப்பினரும், கண்டர்கோட்டை மாவட்ட மருத்துவருமான **திரு. வா. தங்கவேற்பிள்ளை L. M. P.** அவர்கள் 16-8-56ல் மறைந்தமைக்குப் பெரிதும் வருந்துகிறோம். அவரைப் பிரிந்து வருந்தும் தந்தையார் சங்க உறுப்பினர், திரு. T. A. வாசுதேவ பிள்ளை, B. A. (ஓய்வுபெற்ற மாவட்டப் பதிவாளர்) அவர்கட்கும், உடன் பிறந்தார் சங்க உறுப்பினர், திரு. வா. கந்தசாமிப்பிள்ளை, B. A. (ஓய்வுபெற்ற உதவி பதிவாளர்) அவர்கட்கும் சங்கத்தின் சார்பாக எங்கள் உளங்கசிந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பொழிற்றொண்டர்.